# சர்வவியாபி

SARVAVIABI

MISSION PRESS 1840

| 19-11-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் கார்த்திகை 3 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 111 பக்கம் - 12 | இதழ் 44 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## திருப்பலியில் புகைப்படங்கள் எடுப்பது வேண்டாம் - திருத்தந்தை பிரான்சிஸ்.



**தி**ருப்பலி வேளையில், தங்களிடம் உள்ள தொலைபேசியைக் கொண்டு புகைப்படம் எடுப்பதில் கவனம் செலுத்துவோரைக் காணும் போது, தான் அதிகம் வேதனை அடைவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

நவம்பர் 8, இப்புதனன்று, திருப்பலியை மையப்படுத்தி, புதன் மறைக்கல்வி உரை வழங்கிய வேளையில், புனித பேதுரு பசிலிக்கா, மற்றும் வளாகத்தில் தான் திருப்பலியாற்றும் வேளையில், பலர் தங்கள் கைப்பேசியைக் கொண்டு புகைப் படங்கள் எடுப்பது தனக்கு வேதனை தருகிறது என்று கூறியத் திருத்தந்தை, திருப்பலி ஒரு கேளிக்கை காட்சியல்ல என்று வலியுறுத்திக் கூறினார். புகைப்படங்கள் எடுப்பது, விசுவாசிகள் மட்டுமல்ல என்றும், அருள்பணி யாளர்கள், ஆயர்கள் என்று அனைவரும் இந்த தவறை செய்து வருகின்றனர் என்று கூறியத் திருத்தந்தை இந்தத் தவறை அனைவரும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று விண்ணப்பித்தார். திருப்பலியின் நடுவே, பலியாற்றும் அருள்பணியாளர், '**இதயங்களை மேலே எழுப்புங்கள்**' என்று சொல்கிறாரே தவிர, '**தொலைப் பேசிகளை மேலே எழுப்புங்கள்**' என்று சொல்வதில்லை என்று சுட்டிக்காட்டியத் திருத்தந்தை திருப்பலி நேரத்தில் ஆண்டவர் மட்டுமே நம் முழு கவனத்தையும் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்புதனன்று கூறிய இச்சொற்கள், தற்போது, சமூக வலைத்தளத்தில் பெருமளவு பகிரப்பட்டு வருகின்றன. ●

**திருத்தந்தை பிரான்சிஸ்: அணு ஆயுதங்கள் உருவாக்கும் பொய்யான பாதுகாப்பு:** மக்களை அழிக்கும் ஆயுதங்கள், குறிப்பாக அணு ஆயுதங்கள், பொய்யான ஒரு பாதுகாப்பைஇவ்வுலகில் உருவாக்கிய வருகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வெள்ளி காலை தன்னைச் சந்திக்க வந்திருந்த பன்னாட்டு பிரதிநிதிகளிடம் கூறினார். ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, "அணு ஆயுதங்களிலிருந்து விடுதலை பெற்ற உலகை உருவாக்கும் கூறுகள்" என்ற தலைப்பில், வத்திக்கானில் ஏற்பாடு செய்திருந்த ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்ட 350க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளைச் சந்தித்த திருத்தந்தை, உலக சமுதாயத்தின் பொதுநலனை மனதில் கொண்டு வருகை தந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். ஆயுதங்களுக்கு, குறிப்பாக அணு ஆயுதங்களுக்கு பெருமளவு நிதியை செலவிடுவதால், வறுமை ஒழிப்பு, அமைதி வளர்ப்பு, கல்வி, உடல்நலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற ஏனைய முக்கியமான தேவைகளை, அரசுகள் புறந்தள்ளுகின்றன என்று திருத்தந்தை தன் உரையில் குறிப்பிட்டார். உலகின் அணு ஆயுதங்கள் குவிந்துள்ள வேளையில், தவறுதலாக ஓரிடத்தில், அவை வெடிக்க நேர்ந்தால், அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்கவும் நம் மனங்கள் அஞ்சுகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலை வெளியிட்டார். பன்னாட்டு உறவுகள், அணு ஆயுத சக்திகள், இராணுவ பலம் ஆகிய வற்றால் அச்சுறுத் தப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும், ஒரு நாட்டின் உண்மை சக்தியை பறைசாற்ற ஆயுதங்களின் அணிவகுப்பு நடைபெறுகின்றன என்றும், திருத்தந்தை தன் உரையில் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

அணு ஆயுதங்கள், நன்னெறிக்கு புறம்பானவை மட்டு மல்ல, அவற்றைக் கொண்டு தாக்குதல்கள் மேற்கொள்வது, சட்டத்திற்குப் புறம்பானது என்றும், அண்மையில், ஐ.நா. அவை கூட்டமொன்றில், பெரும்பான்மை நாடுகள் வாக்களித் திருப்பது, நம்பிக்கை தரும் ஒரு நிகழ்வு என்று, திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார்.●

## திருத்தந்தை முதலாம் ஜான்பால் 'வணக்கத்துக்குரியவர்' என அறிவிப்பு



**இ**றையடியாரான திருத்தந்தை **முதலாம் ஜான்பால்** அவர்களை புனிதரென அறிவிக்கும் முயற்சியின் அடுத்த நிலையான, அவரை 'வணக்கத்துக்குரியவர்' ("Venerable") என்றநிலைக்கு உயர்த்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். புனிதர் பட்ட வழிமுறைகள் ஒருங் கிணைக்கும் பேராயத்தின் தலைவர், கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ அவர்கள், நவம்பர் 8, இப்புதனன்று பிற்பகல், திருத்தந்தையிடம் சமர்ப்பித்த எட்டுப் பேரில் ஒருவராக, இறையடியார், முதலாம் ஜான்பால் அவர்களின் பெயரும் இடம்பெற்றிருந்தது. 1912ம் ஆண்டு இத்தாலியின் வெனெத்தோ பகுதியில் பிறந்த **ஆல்பினோ லூசியானி** அவர்கள் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் தேதி, முதலாம் ஜான்பால் என்ற பெயருடன், திருத்தந்தையாகப் பொறுப்பேற்று, 33 நாட்களுக்குப்பின், செப்டம்பர் 28ம் தேதி, இறையடி சேர்ந்தார். மேலும், John Brenner என்ற மறைமாவட்ட அருள்பணியாளர், மற்றும் Leonella Sgorbati என்ற அருள்சகோதரி ஆகிய இருவரும், மறைசாட்சிகளாக உயிர் நீத்தனர் என்பதையும், Baden நகரின் அருளாளர் பெர்னார்ட் அவர்களின் புண்ணிய வாழ்வையும் திருத்தந்தை ஏற்றுக் கொண்டார். இவர்களோடு, பிரான்சிஸ்கன் துறவி, Gregorio Fioravanti, இயேசு சபை துறவி, Thomas Morales Perez, பொது நிலையினரான Marcellino da Capradosso என்ற பேராசிரியர், புனித மகுடத்தின் மரியா என்ற அருள்சகோதரிகள் சபையை உருவாக்கிய Teresa Fardella ஆகியோரின் புண்ணிய வாழ்வு சாட்சியங்களையும் திருத்தந்தை ஏற்றுக்கொண்டார். ●

ஆசிரியர் பேனா...

# இறைஊழியர் அருள்மிகு சகோதரி ராணி மரியா அருளாளராக உயர்த்தப்பட்டார்.



இறை ஊழியர் அருள்மிகு சகோதரி **ராணி மரியா** அவர்கள் 04-11-2017 சனிக்கிழமை மத்திய பிரதேசம், இந்தூரில், வத்திக்கான் புனிதர் நிலை வழங்கும் பேராயத்தின் தலைவர் மேதகு கர்தினால், **ஆஞ்சலோ அமாத்தோ** அவர்களால் அருளாளராக உயர்த்தப்பட்டார். இப்புனித நிகழ்வில் நமது நாட்டைச் சார்ந்த நான்கு மேதகு கர்தினால்மார்களும் - மேதகு கர்தினால் **ஆஸ்வால்டு கிராசியஸ்,** மேதகு கர்தினால் **தெலஸ்போர் தொப்போ,** ஆலஞ்சேரி, இந்திய ஆயர் பேரவை தலைவரும் சிரோ மலங்கரா ரீதியின் தலைவரும் ஆன மேதகு கர்தினால் **க்ளீமிஸ்** - இந்தூர் ஆயர் மேதகு **ஜார்ஜ் அனத்தில்** மற்றும் பேராயர்கள் ஆயர் பெருமக்களும், குருக்களும், துறவியரும், 15000 க்கும் அதிகமான இறைமக்களும் பங்கேற்றனர். இந்திய திருச்சபை இன்று அகமகிழ்கிறது. ஏழை எளியவர்களின் நலவாழ்வுக்கு தன்னையே அர்ப்பணித்து பணியாற்றிய இந்த அருட்சகோதரியின்பணி, தியாகத்தை உலக திருச்சபை அங்கீகாரம் செய்வதோடு, இவரை “புனிதர்” பட்ட நிலைக்கு மிக அருகில் அவரை வைத்து பெருமைப்படுகிறது.

**பிறப்பும், கல்வியும்:** கேரளா, ஏர்ணாகுளம் மாவட்டம், புல்லுவாழி பாரம்பரிய கிறிஸ்தவர்களின் சிறிய ஊரில் 29-01-1954-இல் **எலிஸ்வா-பயிலி வட்டலில்** ஆகியோரின் இரண்டாவது மகளாக பிறந்தார் “மேரிகுஞ்ஞு (சின்ன மேரி)” என்றழைக்கப்பட்ட “ராணி மரியா.” சிறுவயதிலேயே குடும்ப செபம், திரு இருதய ஆண்டவர் பக்தி, மரியன்னை வணக்கம், செபமாலை ஆகியவற்றில் மிகுந்த பக்திமிகு பற்றுதல் கொண்டிருந்ததோடு, ஏழை எளியவர்பால் மிகுந்த இரக்கமும் பரிவும் உள்ளவராக விளங்கினார். இப்பண்புகளே அவரது கேரள பணியிலும், வடநாட்டுப் பணிகளிலும் ஆன்மீக தீவிர முயற்சிகளின் அடிப்படையானது. இல்லத்திலும், பெற்றோரிடத்திலும் அவர் தம் பணி வாழ்வுக் கூறுகளை கிரகித்திருந்தார் என்று கூறலாம். 1961-இல் முதல் நன்மையும், 1966-இல் உறுதிப்பூசுதலும் பெற்ற அருட்சகோதரி அவர்கள், தமது S.S.L.C. படிப்பை ஜெயகேரள உயர்நிலைப் பள்ளியில் வெற்றியுடன் முடித்தார்.

**துறவற அழைப்பு:** திருப்பானித்துறா-வில் அருட்கன்னியர்கள் நடத்தும் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் பயிலும்போது, அவரது இதயத்தில் தேவ அழைத்தல் விதை ஊற்றப்பட்டது. செய்தி அறிந்த பெற்றோர் முதலில் எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும், தன் அன்பு மகளில் இறைவனின் அழைத்தலின் மேன்மையை மிகுந்த செப முயற்சிகளுக்குப் பின் சம்மதித்தனர். தன்னைப் போலவே தேவ அழைத்தல் ஆர்வம் கொண்ட செசிலி (இன்று அருட்சகோதரி சோனி) யுடன் 3-7-1972 இல் கிண்டங்கூர்-இல் உள்ள புனித பிரான்சிஸ்கு அசிசியின் கிளாரம்மாள் சபையில் சேர்ந்தார். 01.11.1982-30.4.1973 தொடக்கநிலை பயிற்சியும் (Postulancy), 1-5-1973-1-5-1974 நவசந்நியாச பயிற்சி (Novitiate) யும் பெற்று 1-5-1974ல், தமது 20 ஆவது வயதில் முதல் வார்த்தைப் பாட்டை அளித்து “சகோதரி ராணி மரியா” எனும் பெயர் தாங்கினார். ஏழு ஆண்டுகள் பணிக்குப்பின் 22-5-1980ல் தன்னை நித்தியத்திற்கும் முழுமையாக இயேசுவுக்கு அர்ப்பணித்தார்.

**வடமாநிலங்களில் பணி:** ஏழை, எளியவர்களில் மிகுந்த அன்பும் பரிவும் கொண்ட அருட்சகோதரி அவர்கள், உத்தரப் பிரதேசம் - பிஜ்னோர் மறைப்பணித் தளத்திற்குச் செல்ல 9-7-1975இல் பணிக்கப்பட்டு, டிசம்பர் 1975-இல் பிஜ்னோர் சென்றடைந்து, அம்மறைமாவட்டத்தில் பல மறைப்பணித்தளங்களில் எட்டு ஆண்டுகள் பணியாற்றினார். 1983-1992 வரை மத்தியபிரதேசம் - சாத்னா மறைமாவட்ட சமுகப்பணி ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். குழந்தைகள் கல்வி, முதியோர் இல்லம், ஆதிவாசிகளிடையே பணி ஆகியவற்றில் முழு நேரமும் செலவிட்டார். 1992-1995 வரை மத்திய பிரதேசம் இந்தூர் மறைமாவட்டத்தில் பணியாற்றினார். அவரது பணி ஆர்வத்தையும், மக்களோடு அவருக்கு இருந்த ஈடுபாட்டையும் கண்ட மக்கள் அவரை “இந்தூர் ராணி” என்றே அழைத்தனர்.

இந்தூர் வட்டாரத்தில், பெரு நில உரிமையாளர்கள் (Land Lords) ஏழைத் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக நடத்துவதையும், வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் ஏழைகளை வஞ்சித்து பணம் பறிப்பதையும் கண்ட அருட்சகோதரி அவர்கள் அவர்களை மீட்பதை முழுநேரப் பணியாக மேற்கொண்டார். ஏழைகளுக்கு வீட்டு வசதி, தண்ணீர் வசதி, மின் வசதி, வேலைவாய்ப்பு, தரிசு நிலங்களை பயன் பாட்டுக்கு கொண்டு வருதல், பண முதலைகளிடமிருந்து ஏழைகளின் நிலங்களையும் உரிமைகளையும் மீட்டல் ஆகிய பல பணிகளை மேற்கொண்டார்; அதில் பொது மக்களையும் ஈடுபடுத்தினார். அரசு அலுவலங்களின் உதவி களையும், நீதிமன்றத்தையும் அணுக அவர் தயங்கவில்லை. தங்களது பலமும், புகழும், பணமும் தளர்வுறுவதை உணர்ந்த நிலச்சுவாந்தார்கள், வட்டிக்கடன் கொடுப்பவர்கள், ஆதிவாசி களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் ராணி மரியாவை தங்கள் எதிரியாக நினைக்கத் தொடங்கினர்.

**மறைசாட்சியம்:** இதன் விளைவாக ஜீவன்சிங் என்ற அரசியல்வாதி திட்டமிட்டு, சமுந்தர்சிங் என்று இந்துமதவாத குழுவைச் சேர்ந்த ஒருவரை கைக்கூலியாக்கினான். 25-2-1995 அன்று காலை தனது பணிக்காக உந்து வண்டியில் அருட்சகோதரி ராணி மரியா பயணித்துக் கொண்டிருந்த போது, ஓடும் வண்டியிலேயே, சமுந்தர்சிங் அவரை கத்தியால் குத்தினான். சகோதரி அவர்கள் கத்தியை பிடித்து தடுக்க முயன்று முடியாமல், வெளியில் தள்ளப்பட்டார். அங்கும் அந்த கொலையாளி கத்தியால் பலமுறை குத்தி அவரைக் கொன்றான். ஏராளமானோர் இதைப் பார்த்தும் தடுக்கவோ, தட்டிக் கேட்கவோ முன்வரவில்லை. **54 முறை கத்தியால் குத்தப்பட்ட சகோதரி இரத்த வெள்ளத்தில் இயேசுவின் பெயரைச் சொல்லியபடியே, அவரது பாதத்தில் தன் இன்னுயிரை கையளித்தார்.** கடவுளின் சாயலான மனிதனின் மாண்புக்காக இரத்த சாட்சியான இவரது மறைசாட்சியம்” திருச்சபையின் சமுகப் பணிக்கான மறைசாட்சியம்” (martyrdom for the social cause of the church) என்றழைக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டு ஆயுள் தண்டனை பெற்ற சமுந்தர் சிங்-ஐ அருட்தந்தை மைக்கிள் பொரத்துக்கரா என்ற கர்மல் சபை குருவின் வழிகாட்டலில், ராணி மரியாவின் சகோதரி அருள் சகோதரி செல்மிபால் மனமார மன்னித்து தம் சகோதரராக ஏற்றுக்கொண்டார். ராணி மரியாவின் சகோதரர், அன்னை ஆகியோரும் அவ்வாறே செய்தனர். சமுந்தர்சிங் விடுவிக்கப்பட பல கோரிக்கைகளை அரசுக்கும், நீதிமன்றத்துக்கும் சமர்ப்பித்தனர். 11 ஆண்டுகளுக்குப்பின் விடுதலையான சமுந்தர்சிங் முழுதும் மனம் மாறி, ராணிமரியா இல்லத்திற்குச் சென்று, அவரது அன்னையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். அந்த அன்னை அவரை தம் மகனாக ஏற்றுக்கொண்டு அவரது கரங்களை முத்தமிட்டார். உலகமே இதை வியந்து நோக்கியது.

**புதுமை:** ராணி மரியாவின் சகோதரி அருட்சகோதரி செல்மி பால் நுரையீரல் புற்றுநோயால் அவதியுற்றிருந்தவர், ராணி மரியாவின் இறப்புக்குப்பின் சில நாட்களில், அவரது கனவில் ராணி மரியா தோன்றி, “இனியும் உன்னை நோய் தொடராது” என்று கூறி மறைந்தார். செல்மி பால் முழு குணம் பெற்றார். மருத்துவர்கள் இதை உறுதி செய்தனர். ராணி மரியாவின் கல்லறையில் சமுந்தர் சிங் அடிக்கடி சென்று செபித்தார். மக்கள் தொடர்ச்சியாக அங்கு வந்து செபிக்கின்றனர்.

**அருளாளர்:** கடந்த 2005ஆம் ஆண்டு அருட்சகோதரி ராணி மரியா 'இறை ஊழியர்' என அறிவிக்கப்பட்டார். 4-11-2017 சனிக்கிழமை அன்று இந்தூரில், வத்திக்கான் புனிதர் பட்டமளிப்பு பேராய தலைவர் மேதகு கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ, அவரை அருளாளராக அறிவித்தார்.

புனிதர் பட்டத்துக்கு முந்திய நிலையை அடைந்துள்ள அருளாளர் ராணி மரியா, விரைவில் புனிதர் ஆவார். திருச்சபையின் சமூகப் பணி மறைசாட்சியம் பகர்ந்த, “புன்னகையின் சகோதரி” என்றும் “இந்தூர் ராணி” என்றும் மக்களால் அழைக்கப்பட்ட “அருளாளர் ராணி மரியா” நமக்கு ஒரு சிறந்த முன் மாதிரி. **அவர் நமக்காக பரிந்து பேசுவாராக.** ●

வாரச் சிந்தனை

கிறிஸ்து அரசர் பெருவிழா (26-11-2017) எசே.34:11-12,15-17 1கொரி.15:20-26,28 மத்.25:31-46.

# கிறிஸ்துவின் அரசு! நாம் பெறும் பரிசு!

அருள்திரு.D.அலெக்சாண்டர்,
உதவி பங்குதந்தை, இறையூர்.

**இ**ன்று திருவழிபாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறு சிறப்பிக்கின்றோம். கிறிஸ்து அரசர் பெருவிழா இந்நாளில் முக்கியத்துவம் பெறுகிறது. திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிறு இப்பெருவிழாவாக அமைவது குறிப்பிடத்தக்கது. ஆண்டு முழுவதும் ஆண்டவரின் வார்த்தைகளைக் கேட்டோம், அவரோடு பயணித்தோம், அவரது வார்த்தை களை கடைபிடித்தோம், சில நேரங்களில் கடைபிடிக்க தவறியும் இருக்கிறோம். எனவேதான் இறுதி தீர்ப்பு பற்றிய நற்செய்தி வாசகம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

***அனைத்தையும் அடிபணிய வைக்கும் அரசர்:*** இரண்டாம் வாசகத்தில் எல்லா பகைவரையும் அடிபணிய வைக்கும் ஆட்சியாளர் இயேசு என்று புனித சின்னப்பர் கூறுகிறார். கடைசி பகைவன் சாவுதான். அதுவும் அழிக்கப் பட்டு, அனைத்தும் கிறிஸ்து அரசருக்கு அடிபணியும். இவ்வாறு கடவுளின் அரசை இயேசு சிறப்பாய் நடத்துவார். அப்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாயிருப்பார் என்று சுட்டிக்காட்டுகிறார். சர்வ வல்லவராக இயேசு இருப்பார், யாவும் அவருக்கு அடிபணிந்து வணங்கிடும் என்று புனித சின்னப்பர் உணர்த்துகிறார்.

***ஆயனாய் விளங்கும் அரசர்:*** இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் ஓர் ஆயனைப் போல விளங்குவதை பார்க்கிறோம். பாலஸ்தீனத்தில் ஒவ்வொரு ஆயனும் அவரவர் ஆடுகளை மலைப்பகுதிக்கு ஓட்டிவருவார். இவ்வாறு ஆடுகள் மேயும்போது ஒரு சில ஆடுகள் பிற மந்தைகளோடு சேர்ந்து போய்விடக்கூடிய நிலை ஏற்படலாம். அது ஆயனுக்கு பெரும் இழப்பும், வருத்தமுமாக அமைந்துவிடும். எனவே, ஆயன் காணாமல் போன ஆட்டைத் தேடிச் சென்று அதை மீட்டுக் கொண்டு வரவேண்டும். தந்தைக் கடவுள் இத்தகைய ஒரு ஆயனைப் போல தன் மக்களைத் தேடி வந்து மீட்கிறார். நலிந்த ஆடுகள திடப்படுத்தும் ஆயனப்போல நலிந்த மக்களைத் தேற்றும் இறைவனாக இருக்கிறார். நாம் பாவத்தினாலும் உலக மாயைகளாலும் சிக்கித் தவிக்கும் வேளையில், கடவுள் நம்மைத் தேடிவந்து, கண்டுபிடித்து, மீட்டு, நம்மைத் தேற்றுகிறார். இயேசுவும் தன்னை ஒரு நல்ல ஆயனாக எடுத்துரைக்கிறார். அவரது மந்தையின் ஆடுக ளாய் இருக்கும்போது நமக்கு பயமில்லை, ஆபத்தும் இல்லை.

***நியாயம் தீர்க்கும் அரசர்:*** நலிந்த ஆடுகளைத் தேற்றும் ஆயன் கொழுத்த ஆடுகளை அழிப்பேன் என்கிறார். பிறரை ஏமாற்றி கொழுத்துப்போன மக்களை கடவுள் தண்டிப்பார் என்ற கடவுளின் நியாயத்தையும் முதல் வாசகம் உணர்த்துகிறது. மனிதனின் சட்டம் வேறு, கடவுளின் சட்டம் வேறு. மனிதனின் நியாயம் வேறு, கடவுளின் நியாயம் வேறு. நலிந்தவனைக் கண்டும் காணாதது போல வாழும் கொழுத்தவன், பணக்காரன் கடவுளின் பார்வையில் பாவி ஆகிறான். செல்வந்தரும் ஏழை லாசரும் உவமையில் பணக்காரன் செய்த குற்றம், ஏழை லாசருக்கு அவன் எவ்வுதவியும் செய்யாமல், அவனைக் கண்டு கொள்ளாதது ஆகும். எனவேதான், அப்பணக்காரன் அடிநரகத்திலும் ஏழை லாசர் ஆபிரகாமின் மடியிலும் இடம் பெற்றனர். தனக்குரியது தனக்கு மட்டும் என்று எண்ணி லாசரை கண்டு கொள்ளாத பணக்காரனுக்கு எரிநரக தீர்ப்பு அளித்து கடவுள் நியாயம் தீர்க்கிறார். அவரவர் செயலுக்கு ஏற்ற பரிசை அளிக்கும் கடவுளாக விளங்குகிறார்.

***கிறிஸ்துவின் அளவுகோல்:*** இன்றைய நற்செய்தி இறுதி தீர்ப்பு நாளை உணர்த்துகிறது. ஒரு நீதிமன்றம் போன்ற சூழல் நம் கண்முன் காட்டப்படுகிறது. வானதூதர் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் அரியணையில் அமர்வதும், எல்லாரும் ஒன்று சேர்க்கப்படுவதும், இடப் பக்கத்திலும் வலப்பக்கத்திலுமாக மக்கள் பிரிக்கப் படுவதும் என்று ஒரு நீதிமன்ற சூழலை நாம் பார்க்கிறோம். அதாவது கிறிஸ்து ஓர் அரசரைப்போல நீதி வழங்குவார் என்ற உண்மை இங்கே வெளிப்படுகிறது. நன்மை செய்தோர் அவர்களுக்குரிய பரிசையும், தீமை செய்தோர் அவர்களுக்குரிய தண்டனை யையும் பெறவேண்டும் என்பதுதான் நீதி. அவ்வாறே நீதியை நிலைநாட்டும் அரசராக இயேசு விளங்குகிறார்.

***மகிழ்வும் துயரும் நியாய தீர்ப்பிலே:*** நீதிமன்ற தீர்ப்பு என்றாலே அது ஒருவருக்கு மகிழ்வும் மற்றவர்க்கு ஏமாற்றமும் அளிக்கும். இங்கே கடவுள்தருகின்ற தீர்ப்பு ஒருவர் மற்றவரிடையே எழும் விவாதத்தை தீர்க்கும் தீர்ப்பு அல்ல. மாறாக மனிதன் தன் செயலுக்கே பெறுகின்ற தீர்ப்பு ஆகும். அவரவர் செயலுக்கு அவரவர் பெறுகின்ற பரிசும் தண்டனையும்தான் கடவுளின் தீர்ப்பு. கடவுளுக்கும், பிறருக்கும், தனக்கும் நன்மை செய்தவர் கடவுளின் தீர்ப்பில் மகிழ்வார். இதில் ஏதேனும் ஒன்றை விடுத்தவர் மகிழ்வது இயலாது. கடவுளை அன்பு செய்வதும், பிறரை அன்பு செய்வதும், தன்னையே அன்பு செய்வதும் கடவுளின் பார்வையில் மிக முக்கியம். தன்னையே அன்பு செய்வது என்பது சுயநலம் என்ற பொருளில் அல்ல மாறாக தானும் கடவுளின் சாயல் என்பதால் தன்னையே ஒருவன் புனிதமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

***வியக்க வைக்கும் தீர்ப்பு:*** மானிட மகனின் தீர்ப்பில் எல்லாருமே வியந்து போனார்கள். ஆசீர் பெற்றோரும் வியக்கிறார்கள், சபிக்கப்பட்டோரும் வியக்கிறார்கள். காரணம் ஒன்றுதான். ஆசீர் பெற்றவர்கள் சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளுக்கு தேவையில் உதவினார்கள். பசியாய் இருந்த போது உணவளித்தார்கள். தாகத்தைத் தணித்தார்கள். அன்னியராய் இருந்த போதும் ஏற்றுக் கொண்டார்கள், ஆடையில்லாதபோது உடுத்தினார்கள், நோயுற்றும் சிறையிலும் இருந்தபோது கவனித்துக் கொண்டார்கள். இவ்வாறு ஏழை எளிய மக்களின் மேல் கனிவும், இரக்கமும் கொண்டு வாழ்ந்தார்கள். பிறரில் கடவுளின் சாயலை கண்டு இரங்கினார்கள். இப்போது கடவுளின் இரக்கத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு சின்னஞ்சிறிய என் சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர் கள் என்ற தீர்ப்பு அவர்களுக்கு வியப்பைத் தந்தது. ஆசீர் பெற்று மகிழ்ந்து கொண்டாடினார்கள். மேலும் சின்னஞ்சிறிய என் சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் இவற்றைச் செய்யாதபோது எனக்கே செய்யவில்லை என்ற தீர்ப்பு மற்றவர்களுக்கும் வியப்பைத் தந்தது. சபிக்கப்பட்டவர்களாக அவர்கள் துயருற்றார்கள்.

***தீர்ப்பிலே சிறக்கும் கிறிஸ்து அரசர்:*** மானிட மகனின் தீர்ப்பு மிகவும் வித்தியாசமானது. இவரது தீர்ப்பில் பத்துக் கட்டளைகளோ, திருச்சபைக் கட்டளைகளோ தனித்தனியாக இடம் பெறவில்லை. மாறாக இவை அனைத்தையும் உள்ளடக்கிய அன்புக் கட்டளை மட்டுமே இடம் பெறுகிறது. ஆக அன்பை மட்டுமே அளவுகோலாக கொண்டு தீர்ப்பிடும் அன்பின் அரசர் கிறிஸ்து. அன்பின் அரசராகிய இயேசுவின் அரசில் நாமும் இடம் பெற பிறரை நேசிப்போம், ஏழை எளியோரை நேசிப்போம், அப்போது அவரையும் நேசித்து அவர் தரும் நிலையான மகிழ்வில் நாமும் நிலைக்கலாம். ●

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சர்வவியாபி இதழில் செப விண்ணப்பம் கொடுக்க விரும்பு வோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2017-2018 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். தவறினால் இதழ் நிறுத்தப்படும்.

சந்தாதாரர் MO செய்யும்போது தங்கள் சந்தா எண்ணை MO வில் குறிப்பிடவும். - ஆசிரியர்.



# இந்தியத் திருச்சபையில் (MEP) பாரீஸ் மறைப்பணி சபை

2

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**பாரீஸ் மறைப்பணி குருக்களின் (MEP) சபை வரலாற்றில் 17–ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை உள்ள குறிப்பிடத்தக்க பெரும் நாட்கள்:**

மேற்கூறிய சபை தன் 350-ஆம் ஆண்டு நிறைவின் பெரு விழாவை 2009- ஜுன் 8-ஆம் தேதி பாரீஸ் நகரில் மறைப்பணியை ஊக்குவிக்கும் முறையில் கொண்டாடியது. இச்சபையின் அந்நாள் அதிபர் Fr.Jean Baptiste Etcharren வெளியிட்டுள்ள அறிக்கையைத் தழுவி சபை ஆற்றிய பணி பற்றி விரிவான செய்திகளை இக்கட்டுரை தருகிறது.

எனவே 1658 முதல் 2009 வரை 350–ஆம் ஆண்டுவிழாவாகக் கொண்டாடப்பட்டது. ஃப்ரான்சுவா பலுய், பியர் லம்பர்ட் தெ லா மோத் (François Pallu, Pierre Lambert de la Motte) என்ற இருவரும் இந்த ஆண்டில்தான் அப்போஸ்தோலிக்க பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

**தந்தை அலக்ஸாண்டர்:** MEP சபை வரலாற்றுக்கு அடிக்கல் நாட்டியவர்களை சபை மறக்கவில்லை. அதில் தந்தை அலக்ஸாண்டர் தெ ரொதஸ் குறிப்பிடத்தக்கவர். இவர் வியட்நாமில் பணியாற்றியவர். தந்தை எச்சரன் சபையின் அதிபர் பொறுப்பை ஏற்கும் முன் வியட்நாமில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தை அலக்ஸாண்டர் ஜப்பான் நாட்டிற்கு மிஷனரியாக நியமிக்கப்பட்டார். ஆனால் அங்கு நிலவிய கடுமையான வேதகலாபனையால் அங்குச் செல்ல முடியவில்லை. 1595 முதல் 1614 வரை கிறித்தவ மறையைப் பின்பற்ற அங்கு பெருந்தடை விதிக்கப்பட்டிருந்தது. எனவே தந்தை அலக்ஸாண்டர் மக்காவோ என்ற தீவில் தங்கிக்கொண்டு 1625–க்கும் 1644–க்கும் இடையில் பலமுறை வியட்நாமுக்குச் சென்று மறைப்பணி ஆற்றிவந்தார். வியட்நாமிலிருந்து அவர் வெளியேற்றப்படும் முன் தன் கண் எதிரே தன்னுடைய வேதியர் தலை வெட்டிக் கொல்லப் படுவதைக் கண்டார்.

வேதகலாபனையின் காலத்தில் ஜப்பானில் இருந்த கிறித்தவர்கள் குருக்களின்றி விடப்பட்டதைத் தந்தை கண்டார். வெளிநாட்டுக் குருக்களை நாடு கடத்திவிடுகிறார்கள். ஆனால் உள் நாட்டுக் குருக்களாக இருந்தால் அவர்களை வதைத்தாலும் நாடு கடத்த மாட்டார்கள், கிறித்தவர்கள் ஆயனின்றி விடப்படமாட்டார்கள், அவர்களால்தான் கிறிஸ்தவம் அந்நாடுகளில் நிலைக்கும் என்பதால் உள் நாட்டுக் குருக்களை உருவாக்க வேண்டும் என நினைத்தார். எனவே 1649, ஜுன் மாதத்தில் உரோமைக்குச் சென்று அன்றையத் திருத்தந்தை 10–ஆம் இன்னொசென்ட் என்பவரிடம் வேண்டுகோள் விடுத்தார். "மிஷனரிகளாக குருக்களை மட்டுமல்ல ஆயர்களை அனுப்புங்கள். ஏனெனில் அவர்கள் உள் நாட்டு இளைஞர்களை உருவாக்கிக் குருப்பட்டம் அளிப்பார்கள்" என்று கூறினார். இந்த முயற்சியில் அவர் சந்தித்த தடைகளும் துன்பங்களும் ஏராளம். ஆனால் அவருடைய முயற்சிகள் எந்தப் பலனையும் அளிக்கவில்லை. அவர் தன்னுடைய புதிய பணித்தளமாகிய 'இஸ்பாஹாம்' என்ற நாட்டுக்குச் செல்லும் முன் எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறுகிறார்: "இந்த முயற்சி வெற்றி பெறும் என நம்புகிறேன். இவ்வுலக வாழ்வில் நான் எதிர்பார்க்கும் மகிழ்ச்சி இதுவே. என் பயணங்களில் எல்லாம் நான் கொண்டிருந்த நோக்கமும் இதுவே. இவற்றில் இறைவனின் அதிமிக மகிமையை மட்டுமே தேடுகிறேன்".

**அப்போஸ்தோலிக்கப் பிரதிநிதிகள்:** திருத்தந்தை 7–ஆம் அலக்ஸாண்டர் 1658 ஜுன் 8 அன்று மேலே குறிப்பிட்ட இரு குருக்களையும் அப்போஸ்தோலிக்கப் பிரதிநிதிகளாக நியமித்தார். அதற்கான பாப்பிறை ஆவணத்தில் கையொப்பமிட்டு ஃப்ரான்சுவா பலுய்-ஐ Héliopolis–இன் ஆயராகவும் பியர் லம்பர்ட் தெ லா மோத் என்பவரை Béryte-இன் ஆயராகவும் நியமித்தார். முந்தியவரிடம் சீனா, லாவோஸ் நாடுகளையும் மற்றும் பல மாநிலங்களையும் ஒப்படைத்தார். மற்றவரிடம் கொச்சின் சீனாவையும் மேலும் பல மாநிலங்களையும் ஒப்படைத்தார். சில மாதங்கள் கடந்து பலுய் ஆயர் அறிமுகம் செய்துவைத்த இஞ்ஞாஸ் கொத்தோலொந்தி என்பவரைத் திருத்தந்தை Nankin நாட்டிற்கும் கிழக்குச் சீனாவைச் சேர்ந்த ஐந்து மாநிலங்களுக்கும் அப்போஸ்தோலிக்கப் பிரதிநிதியாக நியமித்தார்.

ஃப்ரான்சுவா பலுய் 1658 நவம்பர் 17–ஆம் தேதியும் பியர் லம்பர்ட் தெ லா மோத் 1660 ஜுன் 11–ஆம் தேதியும் இஞ்ஞாஸ் கொத்தோலொந்தி அதே ஆண்டு நவம்பர் 7–ஆம் தேதியும் ஆயர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

**1669-இல் உரோமையின் கட்டளைகள்:** 1662–ஆம் ஆண்டு விசுவாசப்பரம்புதல் சபை உண்டாக்கப்பட்டது. இது மறைப்பணிகளின் செயல்முறைகள் பற்றி மிகுதியான செய்திகளைச் சேகரித்தது. ஆனால் திருச்சபைக்கும் ஸ்பெயின், போர்ச்சுக்கல் நாட்டு அரசர்களுக்கும் இடையே கையொப்பமான உடன்படிக்கையின் கட்டுப்பாட்டினால் எந்த மாற்றமும் கொண்டுவர முடியாத நிலையில் இருந்தது. இச்சபையின் முதல் பொதுச் செயலராக 27 ஆண்டுகள் பணிபுரிந்தவர் Mgr. Ignoli. இவர் சுதேசக் குருக்களை உருவாக்கலின் அவசியத்தையும் மறைப்பணியைப் பாப்பிறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய தேவையையும் உணர்ந்திருந்தார். எனவே 1659–இல் அப்போஸ்தோலிக்கப் பிரதிநிதிகளுக்குக் கொடுத்த கட்டளைகள் நீண்டகால அனுபவத்தின் விளைவாகும். இவை "நவீன மறைப்பணியின் செயல் திட்டம்" என்று அழைக்கப்பட்டன. புதிதாகத் தோன்றிய MEP சபை இதைத் தன் மேல்வரிச்சட்டமாக எடுத்துக்கொண்டது. இவற்றைத் தாங்கள் அடைய வேண்டிய குறிக்கோளாக மட்டுமல்ல எத்தகைய மதிப்போடு இவற்றை வரவேற்க வேண்டும் என்றும் எல்லா ஆதாயங்களையும் தவிர்த்து இக்கட்டளைகளை மட்டும் பின்பற்றி பணிபுரிய வேண்டும் என்றும் இச்சபை விரும்பியது. – தொடரும்

---

## செபங்கலந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

உளுந்தூர்பேட்டை பங்குதந்தை அருட்திரு. **I. இரட்சகர்** அவர்களின் மூத்த சகோதரர் திரு. **I. அருள்** ஆசிரியர் அவர்கள் 8-11-2017 புதன்கிழமை அன்று இறையடி சேர்ந்தார். 9-11-2017 வியாழக்கிழமை மாலை 3.00 மணி அளவில், சாத்திப்பட்டு தூய இருதய அன்னை பங்கு ஆலயத்தில் அன்னாரது அடக்கச் சடங்கு திருப்பலி அருட்தந்தை **I. இரட்சகர்** தலைமையில் நடைபெற்றது. அவருடன் 50 அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர். அருட்சகோதரிகளும் இறைமக்களும் இக்கூட்டுத் திருப்பலியில் பங்கேற்று, இறையடி சேர்ந்த திரு. **I.அருள்** ஆசிரியருக்காக செபித்தனர். திருப்பலிக்குப் பின் சாத்திப்பட்டு கல்லறையில் அன்னாரது திருவுடல் நல்லடக்கம் நடைபெற்றது. சகோதரரை இழந்து துயருறும் அருட்தந்தை **I. இரட்சகர்** அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இறையடி சேர்ந்த அடியாருடைய மகள், மகன்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, இறையடி சேர்ந்த திரு. **I.அருள்** ஆசிரியரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைய செபிக்கிறோம். - ஆசிரியர்.



# முழுத் திருஅவை வளர்க!

– சுவாமி ஆ. லூயிஸ்.

“ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்கத் திருச்சபையை நம்புகிறேன்.” என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் விசுவாசப் பிரமாணமாகும். அன்று கொரிந்து நகரில் இருந்தது போலத்தான் இன்றும் கிறிஸ்தவர்கள் பலக்குழுக்களுக்கும் பிரிவுகளுக்கும், ஆட்களுக்கும் அமைப்புகட்கும் ஆளாகி சிதறுண்டு கிடக்கும் திருச்சபையின் காட்சியைக் காணும்போது, மற்றவர்களைவிட நாம் எந்த விதத்தில் சான்று பகர்கின்றவர்களாய் இருக்கிறோம் என்ற அடிப்படை வினா நம்மை சவாலுக்கும் கவலைக்கும் ஆளாக்கும் என்பதில் ஐயமில்லை.

**தலத்திருச்சபை:** விண்ணிலிருந்து மண்ணில் மலர்ந்தது, வளர்ந்தது, போதித்தது. பணிபுரிந்தது, பாடுகள்பட்டது, உயிர்த்து எழுந்தது அனைத்தும் தலத்திருச்சபையாகும். இத்தகையத் திருஅவையைத்தான் திருத்தூதர்கள் உலகின் நான்குத் திசையும் சென்று போதித்தனர். தலத்திருச்சபைகளை உருவாக்கி வளர்த்தெடுத்தனர். அந்தந்தத் தலத்திருச்சபைக்கு ஏற்ப வழிகாட்டுதலும், வாழ்வும், வழிபாடும் அமைந்தன. தலத்திருச்சபை செழிப்பாக வளர்ந்தன, பெருகின என்று நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

தலத்திருச்சபைகள் பெருகினக் காலக்கட்டத்தில், அவைகளை ஒருங்கிணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒருங்கிணைக்கும் முயற்சியில் பொதுத் திருச்சபையின் முக்கியத்துவம் தலத்திருச்சபையின் முக்கியத்துவத்தை பலவீனப்படுத்தியது. அதிகார உணர்வு மேலெழ திருச்சபையில் பல்வேறு பாதிப்புகள், பிரிவுகள், போட்டிகள் இடம் பெற்றன.

கடவுள் திருச்சபையை கைவிட்டு விடாமல் அவ்வப்போது சங்கங்கள் வழியாக அனைத்து மக்களையும் வழிநடத்தி வந்தது. இத்தகையப் புதுப்பிக்கும் பணியில் அறுபதுகளில் நடந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை நாம் எளிதில் மறக்க முடியாது. காலத்திற்கு ஏற்ப இன்றையத் திருச்சபை புதுப்பிக்கப்பட்டு உலகோடு இணைந்தும், தனித்தும் திருச்சபை இன்று இயங்குவது நமக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.

மீண்டும் தலத்திருச்சபை தனக்குரியத் தனித்தன்மையைப் பெற்று வளமானப் பாதையில் பயணம் செய்கிறது. பொதுத் திருச்சபையும் மேய்ப்பு உணர்வுடன் தலத்திருச்சபைகளை ஒருங்கிணைப்பது சிறந்த முறையில் இருப்பது பெருமைக்குரியதாகும். இத்தகைய சுதந்திரம் இருப்பினும் பலவீனமான மனித இனம் இன்னமும் வளர இடமுண்டு என்பதை மறவாமல் போராடி பயணம் செய்வதும் பாராட்டுக்குரியதாகும்.

**பொதுத் திருச்சபை:** தனித்திருப்பது எளிது, இணைந்திருப்பது என்பது கடினம் என்பதற்கு ஏற்ப இன்று பொதுத் திருச்சபை சான்று பலவீனமாக இருப்பினும் திருத்தந்தையும் அவரோடு இணைந்து ஒத்துழைக்கும் நிர்வாகமும் பொதுத் திருச்சபையை கடவுள் கிருபையால் கட்டி எழுப்புவதை நாம் உணர்ந்து ஒத்துழைப்போம், உயர்வோம், சான்று பகர்வோம், பணிபுரிவோம்.

தனிமை தோழமைக்கு உடன்படுவது விசுவாச ஆற்றல், தோழமை தனிமைக்கு இடம் தருவது சுதந்திரமாகும். கடினமானாலும் இன்று திருச்சபையின் அதிகாரிகள் திருச்சபையின் இருநிலைகளையும் மிகவும் விவேகத்தோடு வழிநடத்திச் செல்வதை நாம் பாராட்டி தொடர்ந்து விசுவாசத்தில் பயணிப்பது நமது கிறிஸ்தவ மரபாகும். அறிவாற்றல் அதிகரிக்கும்போது, விசுவாச ஆற்றல் சோதனைக்கு ஆளானாலும் இணைந்து பயணிப்பது நல்லது. பல்வேறு சோதனைக்கிடையில் சாதனைப் படைப்பது கடவுளின் இரக்கமாகும், இறைமக்களின் ஒத்துழைப்பாகும், எனவே திருச்சபையைத் தொடர்ந்து விசுவசிப்போம்.

**சோதனை மேல் சோதனை:** மனித இனத்தின் முதல் சோதனை இயேசுவுக்குப் பின்பும் திருச்சபையிலும் சமூகத்திலும் தொடரும் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் நாம் எளிதில் மனம் விட்டுவிடுவோம். ஆனால் கடவுள் கருணையின் கடல் என்பதால் இரக்கத்தை எல்லையில்லாமல் நம்மீது பொழிந்து வருவதை உணர உணர நாம் உயர முடியும் என்னும் நம்பிக்கை வளர வழி உண்டு.

தூதர்கள், மனிதர்கள் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மாட்டோம் என்பது அன்று தெரிந்தோ தெரியாமலோ சொன்னது இன்னமும் தொடர்வது தான் வியப்பிலும் வியப்பாக இருக்கின்றது. மனித இனம் எதில் வளர்ந்துள்ளது என்பதை இத்தகைய மனநிலையில் இருந்து புரிந்து கொள்வோம்.

பிள்ளைகள் பெற்றோர்களுக்குப் பணிவதில் தயக்கம், மாணவர்கள் ஆசிரியர்கட்கு உடன்படுவதில் தயக்கம், பணியாளர்கள் அதிகாரிகட்கு மதிப்பளிப்பதில் மயக்கம் என எல்லா நிலைகளிலும் சமூகத்திலும் திருச்சபையிலும் இந்நிலையைக் காண்பது கவலைக்குரியதாகும்.

அவரவர் பிரியத்திற்கு அனைவரையும் விட்டுவிட்டால் நல்லது என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் பொறுப்பான குழுவையும், குடும்பத்தையும், சமூகத்தையும், சபையையும் இன்று எங்கு காணமுடிகிறது. பொறுப்பில் இருப்பவர்களும், பொறுப்புக்குட்பட்டவர்களும் தன்பிரியத்தை முன்வைத்து இயங்குவது பரிதாபமாகும்.

மெய்மையான இறைவனுக்குப் பணிந்தால், அம்மெய்மையின் வெளிப்பாட்டிற்கும் பணிவது இயல்பாகும். இப்போது இறைவனுக்கும், அயலானுக்கும் பணிவதைவிட தனக்குப் பணிவதே கடினமாக இருக்கிறது. மனசாட்சியையும் விற்றுவிட்டு மனம் போன போக்கில் வாழ விரும்பும்போது விளைவுகள் பரிதாபம், இதுவே நமது அனுபவமாகத் தொடர்கிறது.

**ஆயர்-பாப்பரசர்:** ஆயருக்குப் பணிவா என்றால் பாப்பரசருக்கு என்று பதில், பாப்பரசருக்கா என்று கேட்டால், கடவுளுக்கு என்று ஒரு மந்திரம். ஆகமொத்தம் பணிவில்லாத நிலை திருச்சபையில் நிலவும்போது, நமது விசுவாசம், அர்ப்பணம், பட்டம் எல்லாவற்றையும் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இரட்டை வேடம் அன்றாட வாழ்வின் நடிப்பாக மாறி வருகிறது. எல்லாரையும் திருப்திப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் முடிவில் தோல்வியாகிறது.

பாப்பிறை சபைகள் இன்று யாருக்கும் உடன்படாமல் இருக்க இடமுண்டு. மறைமாவட்டமும் உடன்படாமல் இருக்க இடமுண்டு. தலத்திருச்சபைக்கும், பொதுத்திருச்சபைக்கும் இணைந்து உடன்படவில்லை என்றால், சுயநலம் தனியாக, குழுவாக இன்று தாண்டவமாடுகிறது. இயேசுவை நம்புகின்றவர்கள், அவருக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள் அவரைப் போல இருப்பது இயங்குவது மிகவும் தேவை. இத்தகைய நிலையை நாம் அனைவரும் அன்றாடம் சந்தித்து சாதனைப் படைத்தால் எவ்வளவு நம்பிக்கை நம்மிலும் அயலாரிலும் வளரும், வளரட்டும், வேண்டுவோம்.



**பேராசிரியர் பா. வளன் அரசு அவர்களுக்கு இந்தியாவின் விழுமிய மாந்தன் விருது வழங்கப்பட்டது:** உலகத் திருக்குறள் தகவல் மையத் தலைவரும் தூய யோவான் கல்லூரி முன்னாள் தமிழ்த் தலைவருமான பேராசிரியர் பா.வளன் அரசு அவர்களுக்குப் பன்னாட்டுப் பதிப்பக நிறுவனத்தின் சார்பில் இந்தியாவின் விழுமிய மாந்தன் விருது வழங்கப்பட்டுள்ளது. நாற்பத்தைந்து ஆண்டுகள் மாண்புறு தமிழ்ப் பேராசிரியராகவும், முப்பது ஆய்வறிஞரை உருவாக்கியவராகவும், இருபத்தேழு விழுமிய நூல்களை வழங்கியவராகவும், உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று தமிழ் முழக்கம் செய்தவராகவும் திகழும் பேராசிரியர் பா.வளன் அவர்களைப் பாராட்டி இந்த விருது வழங்கப்படுவதாகப் பன்னாட்டுப் பதிப்பக நிறுவனத்தின் இயக்குநர் சி.எம்.சிங்கு தெரிவித்துள்ளார்.



# தூய இதய மரியன்னையின் பிரான்சிஸ்கன் சகோதரிகள் சபை, பாண்டிச்சேரி - இறை ஊழியர் லூயிஸ் சவீனியன் துப்புயி MEP அவர்களைப் பற்றிய சர்வதேச மாநாட்டின் கருத்துப் பகிர்வு

5-11-17 இதழின் தொடர்ச்சி...

இறை ஊழியரைப்பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகள் வழங்கும் நிகழ்வு காலை 11 மணியளவில் ஆரம்பமானது. முதலாவதாக முனைவர் சுஜித்ரா அவர்களால் **"துப்புயி அடிகளாருக்கும் கவிஞர் சவரிராயலு நாயக்கருக்கும் இடையிலான தமிழ் தொடர்புகள்"** குறித்தும், அருட்சகோதரி கிளவ்தின் ஆரோக்கியமேரி FIHM அவர்கள் **"அருட்தந்தை துப்புயி அடிகளாரின் எழுத்துக் களில் தூய இதய மரியன்னை சபையின் பிரதிபலிப்பு"** என்ற தலைப்பிலும் ஆராய்ச்சிக்கட்டுரைகள் வழங்கினார்கள். மேலும் அருட்தந்தை S. மணிவளன் SJ அவர்கள் **"தமிழ் கிறிஸ்தவ இலக்கிய கலாச்சாரமும், துப்புயி அடிகளாரின் இன்றியமையாத பங்களிப்பும்"**, என்பது பற்றியும், அருட்தந்தை அமுதன் அவர்கள் **"துப்புயி அடிகளாரின் இலக்கியபணியும், அச்சகபணியும் மற்றும் மக்கள் தொடர்பும்"**, என்பது குறித்தும், சபை தலைமை அன்னை அருட்சகோதரி புருனோல்ப்.ஃ.மேரி பாத்திமா பவுலா FIHM அவர்கள் **"பிரான்சிஸ்கு அசிசியாரின் அடிச்சுவடுகளில் தூய இதய கன்னியர் சபையும் துப்புயி அடிகளாரும் "** என்ற தலைப்பிலும் அருட்சகோதரி எத்தெல்பெர்கா பிலோமின் மேரி FIHM அவர்கள் **"துப்புயி அடிகளாரின் இறை சார்பு புண்ணியங்கள் - ஓர் மீள்பார்வை "** என்பது குறித்தும் ஆராய்ச்சி கட்டுரைகள் வழங்க, முதல் நாள் கருத்தரங்கம் இனிதே முடிவுற்றது.

30-ம் தேதி காலை 9.30 மணிக்கு இறைவழிபாட்டு ஜெபத்துடன் இரண்டாம் நாள் அமர்வுகள் ஆரம்பமானது. முனைவர் சி. திருமுருகன் **"துப்புயி மற்றும் முசே அடிகளாரின் பிரெஞ்சு - தமிழ் அகராதி பணி"** பற்றியும், திரு. ஆல்.ஃ.பிரட் **"துப்புயி அடிகளார் புதுச்சேரியில் அச்சிட்ட இலக்கண நூல்கள்"** குறித்தும், அருட்தந்தை சாந்து சிரில் அவர்கள் **"MEP சபையின் விருதுவாக்கும், துப்புயி அடிகளாரும்-ஓர் வரலாற்று மற்றும் மறைபரப்புபணி நோக்கில்"** என்ற தலைப்பிலும் அருட்சகோதரி. இருதயமேரி SSC **"தமிழ் கத்தோலிக்க இலக்கிய தோற்றமும், வளர்ச்சியும்-துப்புயி அடிகளாரின் பங்களிப்பு"** என்பது பற்றியும், அருட்சகோதரி சிரியா மேரி FIHM **"செபபுத்தகங்கள் மற்றும் ஞான வாசகங்கள்: துப்புயி அடிகளார் எழுதியதும், அச்சிட்டதும்"** குறித்தும், முனைவர் சார்லஸ் கிறிஸ்தோபர் ராஜ் **"கத்தோலிக்க இலக்கியநூல்களும், புதுச்சேரியில் துப்புயி அடிகளால் அச்சிட்டவையும், பதிப்பித்தவையும்,"** குறித்தும், இறுதியாக அருட்சகோதரி விமலிமேரி FIHM **"துப்புயி அடிகளாரின் மருத்துவ சிந்தனைகள், ஆன்ம, சரீர மற்றும் சமுதாய வியாதிகளுக்கு மருந்து"** என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்பித்தனர்.

உதவி சபை தலைமை சகோதரி ஃபினியன் மேரி குருசம்மாள் அவர்கள் இறை பேராற்றலின் உடனிருப்பிற்கும் மற்றும் அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார்கள். இந்த சர்வதேச மாநாடானது, இறை ஊழியர் லூயிஸ் சவீனியன் துப்புயி அடிகளாரின் புனிதத்துவத்தையும், அவர் கடைபிடித்து வாழ்ந்த இறை சார்பு புண்ணியங்களையும், நற்செய்தி அறிவிப்பு பணியில் அவருக்கு இருந்த ஈடுபாடு மற்றும் ஆர்வத்தையும், கத்தோலிக்க மறை செழித்தோங்கவும், தமிழ் சமுதாயம்



வளரவும் வேண்டிய அவரது தீராத தாகத்தையும் இயம்பியது. மேலும் தமிழ் இலக்கணம், உரைநடை வளர்ச்சியில் அவரது பங்களிப்பையும், பெண்கள் கல்வி கற்று சமுதாயத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்ற அவரது தொண்டு மனப்பான்மையையும் பிரஞ்சு மொழியில் அவரது பாண்டித்துவத்தையும் மற்றும் அவரது புகழையும் தெள்ளத் தெளிவாக இறைமக்களுக்கு அறிவித்தது. மாநாட்டில் பங்கேற்ற அனைவரும் இறை அன்பிலும் பிறரன்பிலும் வளர தூண்டுகோலாக அமைந்தது. இறை ஊழியர் துப்புயி அடிகளார் ஒருநாள் புனிதராக தாய் திருச்சபையால் உயர்த்தப்பட பேராயர் அந்தோணி ஆனந்தராயர் தலைமையில் அருட்பணியாளாகளுடன் இணைந்து சபை அன்னை மற்றும் தயாரிப்பு குழுவினர் மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளும் பலனளிக்க ஜெபிக்குமாறு சபை தலைமை சகோதரி அவர்கள் பெயரால் கேட்டுக்கொள்கிறோம்.

**தொகுத்தளிப்பவர்**

**அருட்சகோதரி எத்தெல்பெர்கா பிலோமின்மேரி FIHM**

**உதவி வேண்டுகையாளர்**

---

**பாகிஸ்தான்: நாணயம் அச்சிட்டு அருள்சகோதரியை கௌரவிக்கும் பாகிஸ்தான்:** பாகிஸ்தானில் தொழுநோயை அகற்றுவதற்கு அயராது போராடி, இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் உயிரிழந்த ஜெர்மன் அருள்சகோதரி Ruth Martha Pfau அவர்களை கௌரவிக்கும் விதமாக 50,000 நாணயங்களை வெளியிட உள்ளது பாகிஸ்தான் அரசு. 1960 ம் ஆண்டு முதல் பாகிஸ்தானில் தொழுநோயாளர்களிடையே பணியாற்றி வந்த அருள்சகோதரி Martha Pfau அவர்கள், இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் தேதி உயிரிழந்தபோது, அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அருள்சகோதரி Martha Pfau அவர்களின் தியாகத்தாலும், தன்னலமற்ற சேவையாலும் பயனடைந்துள்ள பாகிஸ்தான் நாடு, அவருக்கு கடன்பட்டுள்ளது என தெரிவித்தார், பாகிஸ்தான் பிரதமர் Shaihad Khaqan Abbasi. பாகிஸ்தான் பிரதமரின் தலைமையில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில், 50 ரூபாய் மதிப்புடன் கூடிய 50,000 நாணயங்களை, அருள் சகோதரி அவர்களை கௌரவிக்கும் விதமாக வெளியிட உள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. பாகிஸ்தானின் மத்திய வங்கியும், இந்த நாணய வெளியீட்டிற்கு தன் ஒப்புதலை வழங்கியுள்ளது. - UCAN.

## பேராயர் மேதகு S. மைக்கேல் அகுஸ்தீன் ஆண்டகை அவர்களுக்கு எழுத்தாளர்களின் இரங்கல் செய்தி



**12.6.1933 – 4.11.2017, 84 வயதில் இறையடி சேர்ந்த, புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டப் பேராயர் மேதகு S. மைக்கேல் அகஸ்டின் அவர்களுக்கு கவிதாஞ்சலி**

### மனிதராய் வந்தீர்! புனிதராய் வருவீர்!

கவிக்கோ திரு. அணிலாடி **SL.** ஜோசப், தேசிய நல்லாசிரியர்.

கோவிலானூர் கோவில்
மாடப்புறா பீடச்சிறுவன்
பிரமாண்ட மேற்றாசனத்தின்
பேராயர்...

ஐம்பத்தாறாண்டுகள் குரு
அணுகவில்லை பாவ மரு
முப்பத்தொம்பதாண்டுகள் ஆயர்
முணு முணுக்காத நேயர்.
பதவி ஏணிகண்ட பர்வதம்
பணிவுதான் அவரின சேர்விதம்.
மைக்கேல் அகஸ்டின் வாழ்ந்தார்
நிறைவாழ்வு நூற்சதம்.

வயது எட்டு நாலு - அதை
எட்டினாலே நூறு
எடுத்தோதுமே அவர் புகழாறு.

புனித மிக்கேல் சம்மனசின் அறிவாளால்

புனித அகஸ்டின் பேராயர்
அறிவால் - இவர்
இருபத்தோராம் நூற்றாண்டு வாழ்ந்த
இருமடங்கு புனிதர்.
ஈவு இரக்கம் கொண்ட மனிதர்.

மூன்று மேற்றாசன வெண்கலக் குரல்
நம்மைக் கண்கலங்கவிட்டுப் போனதேன்?
பாசத்தை அங்கியாய் அணிந்த
பண்பாளரே! கண்ணாளரே!
பொன்னூஞ்சல் ஆடுவதற்கா
மண்ணூஞ்சலுக்குப் போய்விட்டாய்?
சுட்டெரிக்காத சூரியன் நீ
சுருங்கி முற்றுப்புள்ளியானதேன்?

உம் கால்படாத பூமியில்லை
உம் கால்படாத போனில்லை
எங்கும் சுற்றிய சூறாவளியே
மூச்சுகாற்று ஏன் முடங்கிப்போனது?

உம் இதயம் துடித்தது...
மனிதம் அதில்
இயேசுவைப் படித்தது - உம்
இரு கைகளும் மீனாய்ப் பிடித்தது.

காட்டிலும் மேட்டிலும்...
ஏட்டிலும் எழுத்திலும்
பாட்டிலும் பட்டிலும்
திசைகள் எட்டிலும்
அரண்மனை மணியொலியாய்
உம் சிம்மக்குரல் கேட்டது-அது
விடுதலை விதைப் போட்டது.
சர்வமக்களையும் தொட்டது!

உம் வயது ஒரு பங்கு என்றால்
உம் சாதனைகள் நூறு மடங்கு
அளந்தால்..... செஞ்சிக்கோட்டையின்
ஆறு கிடங்கு
உம் துறவறத் திருமணத்தின்
ஆறுஜாடி மடங்கு
வானுயர்ந்த கட்டடங்கள்...
வளாக...வளாக பள்ளிகள்
நீர் கண்டிருக்கலாம் ஆயிரம்... ஆனால்
செஞ்சி நெல் நிறுவனம்தான்
தாங்கல்கரை பள்ளிக்கு
தங்கள்பெயரைத் தாரைவார்த்தது.
மலைவாழ்மாணவர் மனதில்
சிலைவாழ்வார் ஆண்டவர் எளிதில் என்று.
உம் பெயரை சூட்டியவர்தான்-உமக்கிந்த
இரங்கற்பா கட்டியவர்.

தப்பையே அறியாத உமது
தர்ம தொப்பை....
வாரி இறைத்தது விவிலிய உப்பை.
கண்டிப்பாய் கிடைக்கும் உமக்கு
இயேசுவின் தங்கக் கோப்பை.

நீர்! SC கிறிஸ்தவரின் வக்கில்
வாதாடினார் வழக்கில்.
உமது அயரா வியர்வை
ஒருநாள் தருமே அவ்வுயர்வை.

வழக்கமாய்
கத்தோலிக்கப்பள்ளிகளுக்கு மட்டுமே
காலெடுத்துவைப்பார் பேராயர்கள்
ஆனால், செஞ்சி அரசு பள்ளியில்
முரசு கொட்ட அரியணை ஏறினார்
நெல்லின் இலவச புத்தகங்களைத்
தந்து
பேறுபெற்றீர் என பேசினார் நம்
பேராயர்.

உத்தரிக்கும் ஆன்மாக்கள்
மாதத்தில்
கத்தரித்துக் கொண்டிருக்கிறார்
அவர்........தம் நித்திரைக்குக்கூட
உத்தரவிடும்
பத்தரைமாற்றுத் தங்கம்
இத்தரை வியந்த மானுட அங்கம்!

பாகுபாடு என்ற சாபகேடில்லா
சரித்திர நாயகன் - இனி
இதயக் கல்வெட்டில் மின்னுவார்
மோட்சத்தில்.... இறைவனின்
இனிய ஆன்மாக்களை
எண்ணுவார்.
வாழ்க பேராயர்!

●

---

❖ முன்னாள் பேராயர் **வந்திக்கத் தக்க மைக்கேல் அகஸ்டின்** அவர்களின் மரணச் செய்தி கேட்டு நான் பெரிதும் வருந்தினேன். நான் இளங்கலை வகுப்பு மாணவனாக 1954-56 இல் திருச்சி தூய வளனார் கல்லூரியில் பயின்றபோது நம் பேராயர் அவர்கள் குருமட மாணவராக இருக்கும்போது எங்களுடன் தூய இருதய விடுதியில் தங்கி அதே கல்லூரியில் பயின்று வந்தார். அப்பொழு தெல்லாம் அவரை நாங்கள் பிரதர் அகஸ்டின் என்று அழைப்போம். அன்பாக அவருடன் பழகினோம். ஆகவே அந்நாள் நினைவில் அவரை நான் நினைத்துப் பார்த்து அவர் மறைவில் நான் பெரிதும் துயருகிறேன். நம் பேராயரின் ஆன்மா இறைவனின் திருமுன் என்றென்றும் பேரின்பத்தில் திளைக்க இறைவனின் இரக்கப் பெருக்கை வேண்டுகின்றேன்.

நன்றி- வணக்கம். தங்கள் பேரன்புள்ள
திருச்சி-620018 பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,**
7-11-17 திருச்சி.

---

❖ ஆசிரிய அடிகளார் அவர்களுக்கு, வணக்கம்.

12-11-2017 தேதியிட்ட சர்வவியாபி கிடைத்தது. முன்னாள் பேராயர் அவர்கள் மறைவு செய்திகளை தக்க படங்களுடன் மிக அருமையாக வெளியிட்டுள் ளீர்கள். "வியாபி" அவருக்கு மிகுந்த கடமைப் பட்டுள்ளது.

தனிப்பட்ட முறையில் எனக்கு ஆயர் அவர்களின் மறைவு பேரிழப்பாகும். 'புதுவை-கடலூர் மறைமாவட்ட வரலாறு' நூல் எழுத எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர். ஓய்வு பெற்றுள்ள முன்னாள் மிஷன் பிரஸ் குரு அருட்திரு. ஜான் துரைசாமி அவர்களுக்கும் இதில் பெரும் பங்கு உண்டு.

கடந்த வருடம் ஓர் நாள் ஆயர் அவர்களை அவருடைய கீழ்ப்புத்துப்பட்டு ஓய்வு இல்லத்தில் போய் சந்தித்தேன். அந்த பழைய முகமலர்ச்சியுடன் அவர் என்னை வரவேற்று பேசி வழியனுப்பியது, என்னால் மறக்க இயலாத ஒன்று.

ஆயர் அவர்கள் தாமே வரைந்த ஓவியத்தை சர்வவியாபியில் வெளியிட்டுள்ளீர்கள். அதைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போனேன். அனைவரிடமும் சந்தோஷமாகப் பேசி ஆசீர்வதிப்பார். அதனால் தான் "மக்கள் பேராயர்" என்று அழைக்கப்பட்டார்.

கிளமெண்ட் ஈஸ்வர்,
31, நேரு நகர், புதுவை-11.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



**18ஆம் படலம்**

கொடிய கொள்ளை நோயாக வந்த ஐந்தாம் வாதையால், எகிப்தியரின் கால்நடைகள் இறந்தன. ஆனால், இசுரயேலரின் கால்நடைகளோ நன்றாக இருந்தன! இதன் மூலம் யாவே கடவுளின் கைவன்மை வெளிப்பட்டது; இஸ்ரயேலரை விடுவிக்கும் விண்ணகத் தந்தையின் திருவுளத்திட்டம் செயல்பட்டது!

---

9 **கொள்ளைநோய், இறைவனின் ஆணையை ஏற்க மறுத்த அதிகார ஆணவ பார்வோனைத் தண்டித்து, யாவே கடவுளின் கைவன்மையை அறிந்து உணர்ந்து பார்வோன் மனம் மாறி, இசுரயேல் மக்களின் வேண்டுகோளை ஏற்கச் செய்யவே இறைவனால் ஏவப்பட்டதாகும்!**

இறைவன் ஏவிய கொள்ளைநோய் என்பதால்
எவர்அறி வார்கொல் அந்நோய்த் தோற்றவாய்?
குறையுடை மன்னவன், கொடுமைகள் இழைப்பவன்
கூட்டியே மருத்துவர் நோய்வாய் அறிந்திட,
துறைகள் துருவிடச் சொல்லினும் ஒன்றுமே
தோன்றிடா தவர்களோ விதிர்ந்து விழிப்பரே!
இறைவாக் கேற்கா திருந்த பார்வோன்
இப்படிக் கேடுறும் நிலைகண் டிரங்குவான்!

(தோற்றுவாய்-கொள்ளைநோய் திடீரென்று வருமாகையால், நோய்நாடி, நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்(வழி) ஆய்ந்து தெளிந்து தெரிந்து ஒழிக்கவல்லவர்இறைவனைத் தவிர வேறு எவருமாய் இருக்க முடியாது!)

10 **பார்வோனைச் சந்தித்த யாவே கடவுளின் தூதுவர்களாகிய மோசேயும் ஆரோனும், கொள்ளைநோய் நாளைக்கே வரும், என்றனர். கடவுளே நாள் குறித்துள்ளார்! இடையே உள்ள கால நேரத்திற்குள் பார்வோன் ஆண்டவரின் ஆணையை ஏற்றால், கொள்ளைநோய், ஆடுமாடுகள் பிற கால்நடைகள் எதையும் தாக்கி அழிக்காது என்பதையெல்லாம் அவ்விருவரும் தெள்ளத் தெளிவாய் இறைவாக்காய் எடுத்துரைத்தனர்.**

“நாளை தினமே நாடெலாம் கால்நடை,
நலிவுற் றிறக்கக் கொடிய கொள்ளைநோய்,
தோளைத் தட்டியே தொற்றிப் பரவிடும்!
தொய்வுறா அந்நோய் கால்நடை அனைத்தையும்
தேளைப் போன்றே கொட்டிக் குலைத்திடும்!
தேம்பி யழுவர் நும்குடி மக்களே!
வாளைச் சுழற்றியே வரும்நோய் எதிர்க்கவே
வழிஇலை மன்னா!” என்றவர் சொன்னார்!

(நாடெல்லாம் கால்நடை - திறந்த வெளியிலும் வயல் நிறைந்த பகுதிகளிலும்,காடு மேடுகளிலும் மேய்ந்து திரிகின்ற அரசனுக்குச் சொந்தமானதும், குடிமக்களுக்கு உடையதுமான, குறிப்பாக எகிப்தியர்களுக்கு மட்டும் உரிய, நாடெங்கிலும் உள்ள கால்நடைகள்)

11 **ஆண்டவர் பார்வோனிடம் சொல்லுமாறு, இனி நடக்கப் போவது என்ன என்பது குறித்து ஆண்டவர் சொன்னதை மோசே பார்வோனிடம் சொன்னார். (விப.9:4-5) “ஆண்டவரும், இசுரயேலரின்கால்நடைகளுக்கும் எகிப்தியர்களின் கால்நடைகளுக்கும் இடையே வேறுபாடு காட்டுவார். எனவே இஸ்ரயேல் மக்களுக்குரியவை அனைத்திலும் எவையுமே மடிந்து போகா. நாளைய தினமே ஆண்டவர் இதனை நாட்டில் செயல்படுத்தப் போகிறார் என்று ஆண்டவரே ஒரு நேரத்தையும் குறித்துவிட்டார்.”**

“எகிப்தியர் கால்நடை மட்டுமே மடிந்திட
இசுரேல் மக்கள கால்நடை அனைத்தும்
மகிழ்ச்சியில் செழிப்புடை கோசேன் நிலமதில்,
மடியா திருந்தே துள்ளித் திரிந்திடும்!
திகிலடைந்(து) எகிப்தியர் கொள்ளைநோய்க் காரணம்
தெரிந்திடா திருந்தே திகைத்தவர் அழுகையில்,
மகிமையின் கடவுள் யாவே அருஞ்செயல்
மன்னவா நீயே அறிவாய் நாளையே!”

(அருஞ்செயல்-மனிதரால் செய்ய முடியாத, இறைவனால் மட்டும் செய்யப்படும் புதுமைச்செயல்)

12 **இறைவனே சொல்வதாக அவர்சொல்லச் சொன்ன அவர்தம் அருளுரையை, மோசே தம் அண்ணன் ஆரோனுடன் சென்று, இனி என்ன நடக்கும் என்பதைப் பார்வோனிடம் தம் தூதுரையாக எடுத்துரைத்து, உடனே அவனிடமிருந்து அகன்று வந்தார்.**

# இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியில்

## “இறைவெளிப்பாடு” பற்றிய கோட்பாட்டு விளக்கம்

## DOGMATIC CONSTITUTION ON DIVINE REVELATION

- **சகோ.மரிய சலேத், சென்னை.**

இறைவனின் வார்த்தைக்குப் பணிவுடன் செவிசாய்த்து, நம்பிக்கையுடன் அதைப் பறைசாற்ற இந்த “இறைவார்த்தை” என்னும் கோட்பாட்டு விளக்கம் அடிப்படையாக அமைந்தது. மீட்பின் வரலாற்றில் கடவுள் ஆற்றிய செயல்கள், போதனைகள், சொற்கள் அவற்றில் அடங்கியுள்ள இறைத் திட்டத்தைத் தெளிவுப்படுத்தி கடவுளையும் மனிதரின் நிறைவாழ்வையும் பற்றிய ஆழ்ந்த உண்மை இணைப்பாளரான கிறிஸ்து நம்முன் சுடர்விட்டு ஒளிரட்டும் என்பதைப் பதிக்கின்றது. இந்தக் கோட்பாடு. மக்களோடு உறவுகொண்டு, நண்பர்களாக உரையாடி அவர்களோடு குடிகொள்கிறார். இத்திட்டம் கிறிஸ்துவில் நிறைவேறுகின்றது. இக்கோட்பாட்டு விளக்கம் 6 இயல்களையும் 26 எண்களையும் கொண்டது. இந்த ஆறு இயல்களும் கடவுள்-மனிதர்கள் உறவையும், கிறிஸ்துவே கடவுளின் வார்த்தை, அவரது இறப்பு உயிர்தெழுதலும் இறைவார்த்தையின் வெளிப்பாடு என்பதையும், திருச்சபையின் மரபுவழி இறைவெளிப்பாடு, இறை ஏவுதல், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, திருச்சபை வாழ்வில் திருமறை நூல் போன்றவற்றை இக்கோட்பாடு விளக்குகிறது. திருமறை நூல்களுக்கு விளக்கம் கொடுக்கும்போது மூன்று கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

i) இறை ஏவுதல் பெற்ற நூல்கள் யாவும் மனித மீட்புக்காக எழுதப்பெற்றவை. ii) திருநூலில் உள்ளவை யாவும் தத்தம் இலக்கியம் வகையின்படி புரிந்துகொள்ளப்பட வேண்டும். iii) திருமறை நூல்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து பொருள் தருபவர் இயேசு கிறிஸ்துவே.

**இக்கோட்பாட்டின் மைய பொருள்கள்:** 1) வாக்கு வழியாக அனைத்தையும் படைத்து, காத்து பற்பல முறையிலும், பல்வேறு வகையிலும் இறைவாக்கினர் வழியாக பேசிய கடவுள், இறுதியாக இயேசு கிறிஸ்து வழியாக நிறைவாழ்வுப் பணியை நிறைவேற்றுகின்றார். வெளிப்படுத்தும் கடவுளுக்கு மனிதர் நம்பிக்கை கொண்டு கீழ்படிய வேண்டும். இதன் வழியாக அவர்கள் அறிவோடும், விருப்பத்தோடும் முழுமையாகக் கடவுளுக்குப் பணிகிறார்கள் (எண்.4,5)

2) திருமரபும் விவிலியமும் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைவார்த்தையின் ஒரே திருக்களஞ்சியமாகும். இத்திருகளஞ்சியத்தைப் பற்றி கொண்டு தூய மக்களனைவரும் தம் அருள்பணியாளர்களோடு இணைந்து திருத்தூதர்களின் போதனையிலும், நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் தொடர்ந்து நிலைநிற்கின்றனர். திருமரபு, விவிலியம், திருச்சபையின் ஆசிரியம் ஆகியவை கடவுளின் ஞானத்தின் திட்டத்தின்படி ஒன்றோடென்று நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியாது என்பது தெளிவு. (எண்.10)

3) நான்கு நற்செய்தி நூல்களையும் தவிர தூய ஆவியால் ஏவப்பட்டுத் தூய பவுல் எழுதிய திருமுகங்களும்,பிற திருத்தூதரின் நூல்களும் கடவுளின் ஞானமிகு திட்டத்தின்படி ஆண்டவராகிய கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் தெய்வீகப் பணியால் வரும் நிறைவாழ்வின் வல்லமை அறிவிக்கப்படுகின்றது. (எண்.20)

4) “விவிலியத்தை அறியாமல் இருப்பது கிறிஸ்துவையே அறியா மலிருப்பதாகும்” என்பதற்கிணங்க விவிலியத்தை ஆர்வத்துடன் படித்துக் கவனத்துடன் ஆராய்ந்து, இறைப்பற்றுடன் வாசித்து அதில் ஊன்றிருத்தல் இன்றியமையாதது. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே உரையாடல் நிகழ வேண்டுமென்றால் விவிலியத்தை வாசிக்கும் போது இறைவேண்டல் செய்ய வேண்டும் இறைவார்த்தைகளை வாசிக்கும்போது அவர் பேசுவதைக் கேட்கிறோம். எண் 25. ●

---

சொன்னவை அனைத்தும் கேட்டான் மன்னவன்!
சோர்வுடன் இருந்த அவனது பதிலும்
என்னதான் என்பதை ஆங்கிருந் தறிய
இயைந்திடா மோசே அண்ணன் பின்வர,
முன்இறைசொல்லச் சொன்னதைச் சொன்னபின்
முடிந்தது அன்றையத் தூதுரைப் பணியென,
பின்நிகழ் வனைத்தும் இறைவனின் திருவுளப்
பேறுடைத் தாக இருக்குமென் றகன்றார்!

(இயைந்திடா-இணங்கிடா; முன்-பார்வோன் முன்சென்று; திருவுளப் பேறுடைத்தாக - இறை உள்ளத்தின் அருளுடைத்தாக)

**தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-171**
**நவம்பர் மாத வெளியீடு. (2017)**
**அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

**வா**ரம் தவறாமல் 111 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்துவரும் வாசகர் பெரு மக்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். நவம்பர் மாதம் என்றாலே அனைத்துப் புனிதர்களின் ஞாபகம்தான் நம் அனைவரின் நினைவுக்கு வருகிறது. பொதுவாக எல்லா புனிதர்களின் வாழ்க்கையிலும் கசப்பான அனுபவங்களும், எல்லா பாவிகளுக்கும் மனமாற்றத்திற்கான எதிர்காலமும் உண்டு என்பதை இவ்விழா எடுத்துரைக்கின்றது. புனிதர்கள் விண்ணகத்தில் இருந்து தோன்ற வில்லை. மாறாக மனிதராகப் பிறந்து இயேசுவைப் போல் தூய்மையாக வாழ்ந்து, அவரைப் பின்பற்றி வந்து, வாழ்வில் வரும் தடைகளை சவாலாக ஏற்று வாழ்ந்தவர்கள். எனவே என் அன்பிற்குரிய வாசகர்களே! இம்மாதம் முழுவதும் “இறைவா நீயாக நான் மாற வேண்டும், எனக்கு உம் அருள் தந்து என்னை காத்திடும் ஆண்டவரே!” என்று ஜெபித்து இறைஅருள் பெற்று என்றும் மகிழ்வுடன் வாழ ஜெபத்துடன் வாழ்த்துகிறேன். எனது பணி வாழ்விற்காக ஜெபியுங்கள்.

இறை ஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **15–11–2017** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறை யில் முதல் **10** நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖ குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran@ gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

## இடமிருந்து வலம்:

2. ஆண்டவர்............உயிர்ப்பிச்சை அளித்துள்ளார்.
3. அதில் வைத்து..............மூடி முத்திரையிட்டார்.
4. தன்னால்..................முடியும் என்று கற்பனை செய்தவன்.
11. செய்தி ............பரவியது.
12. ஏனெனில்............யாருக்கு உரியது.
14. அந்த.................ப் போனின் கையையும் அவர்களுக்கு காட்டினார்.
17. யாசோன் கிரேக்க.............புகுத்துதல்.
18. தொல்லையின்றி..............வாழவிடவில்லை.
20. நடித்து.................பேசி ஆணையிட்டான்.

## வலமிருந்து இடம்:

2. இதயத்தை.............அனைவருக்கும் அளிப்பாராக.
5. அதற்கு விடுதலை...........முடிவு செய்தான்.
7. அவனுடைய.........எவ்வகையிலும் அடங்கவேயில்லை.
15. இயல்புக்கு.................இறுமாப்பால் தூண்டப்பட்டு.
16. நகரங்களுக்கு உடனே...........யனுப்பினான்.

19. உரக்கப்............எலயாசரை ஏற்படுத்தினார்.
21. கோவிலில்................எலியதோரின் முயற்சி..

## மேலிருந்து கீழ்:

1. ஏற்கெனவே............செய்யப்பட்டு விட்டன.
2. தொகை கொடுப்பதாக ..............கூறினான்.
4. இதுவே................ரின் முடிவு.
6. சாந்திக்கு.............பதினைந்தாம்.
13. இழிவுபடுத்துவது.............செயல் அன்று
14. மானத்தோடு..............விரும்பினான்.
5. நாற்பதாயிரம் பேர் போரில்.............பட்டனர்.

## கீழிருந்து மேல்:

8. உன்னை.............காத்து வந்துள்ளேன்.
9. காட்டுக்..............உண்டு காலம் கழித்தார்கள்.
10. ஏரி..................யால் நிரம்பி வழிந்தது.
12. நம் ...................க்கு உட்பட்ட குடிமக்கள்.
5. சிலரைக்............செய்தனர்.
15. ஐம்பது கிலோ.............தொலையில்
20. யூதாவும்...............வாழ்த்தி எழுதுவது.
22. நீங்கள் என்...........எவ்வாறு உருவானீர்கள்?

**2 மக்கபெயர் ஆகமம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | | | 3 | | |
| | | 4 | | | | | | | 5 |
| | | | | | | | | 6 | |
| | | | | | | 7 | 8 | | |
| 9 | | | 10 | | 11 | | | | |
| | 12 | | 13 | | 14 | | | | |
| | | | | 15 | | | | 16 | |
| | | 17 | | | | | | | |
| | 18 | | | | | | | 19 | |
| 20 | | | | | | | 21 | | 22 |



**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**
❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு வி[illegible]**
**குறுக்கெழுத்துப் போட்டி - 171**
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt.
செல்: **99423 11068**

## மண்ணக வாழ்வின் 100-ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்: 17-11-1917
மறைவு: 22-01-2008

**அருட்தந்தை. P. இருதயம்**

**திருப்பொழிவு: 19-12-1945**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" -யோவான். 11:25

அவர்களின் நூறாவது பிறந்த நாள் நினைவாக 17-11-2017 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் புதுவை தூய இதய ஆண்டவர் பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றப்படும். அருட் தந்தைக்காக செபிக்க கேட்டுக் கொள்கிறோம்.

**குடும்பத்தினர்.**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**"எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்கமே! எங்களை இறைசமூகத்தில் வாழ நல்வழி காட்டி இறை இரக்கத்தில் வாழ நல்வழிகாட்டி இறையரசில் இணைந்தாயே! உம்மை நாங்கள் வணங்குகிறோம்"**



புவியுலோகு: 20-3-1951
இறை இயலோகு: 25-11-2016

**திருமதி. S.சாந்தா(எ)தெரேஸ்மேரி** (Retd.Tr)

"உமது மனம் விரும்புவதை அவர் உமக்குத் தந்தருள்வாராக! உம் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவாராக"-தி.பா.20:4

அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய சாந்தி அடைய 25-11-2017 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் புதுவை ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து நெல்லித்தோப்பு கல்லறை தோட்டத்தில் இதய அஞ்சலியும் நடைபெறும்.

**பிரிவால் துயருறும்**
**கணவர்: T. பெலிக்ஸ்**
**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.**

## விண்ணக வாழ்வின் ஏழாம் ஆண்டு நினைவு



**திருமதி. மேரி ஸ்டெல்லா**
ஆசிரியை (ஓய்வு)

**மண்ணில்** 17-09-1937

**விண்ணில்** 22-11-2011

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
– யோவான்.11:25

**செபம்**

கனிவும் மனத்தாழ்மையும் இரக்கமும் பரிவும் உள்ள என் இனிய இயேசுவே! நிலையான நித்திய பேரின்ப வாழ்வுக்கு உம்மால் அழைக்கப்பட்ட

**திருமதி. மேரி ஸ்டெல்லா**

அவர்களின் ஆன்மாவை உம்மோடு இறையாட்சியில் என்றும் இணைந்திட செய்ததமைக்காக உமக்கு நன்றி கூறி செபிக்கிறோம், ஆமென்.

பிரிவால் துயருறுபவர்கள்
கணவர்: சகோ.அ.ஆரோக்கியதாஸ்
மற்றும் குடும்பத்தினர்.
நல்லாயன் இல்லம், ஜெயபுரம்,
திண்டிவனம்-604 002.

*திருப்பலி 22-11-2017 புதன்கிழமை காலை 6.15 மணிக்கு திண்டிவனம் புனித வியாகுல அன்னை ஆலயம். இவரது ஆன்மாவின் விண்ணக வாழ்விற்காக ஜெபிக்கவும், உங்கள் தனி செபத்தில் நினைவு கூறவும் அன்புடன் வேண்டுகிறோம்.*

## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் : 12-11-1947



விண்ணில் : 21-11-2014

**திரு. P. அந்தோணிசாமி**

மேனாள் உபதலைவர், பங்குபேரவை, வடலூர்.
"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோ.11:25
திருப்பலி நிகழிடம்: திரு இருதய ஆண்டவர் ஆலயம், வடலூர்.
நாள்: 21-11-2017 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில்.

என்றும் நினைவில் வாழும்
மனைவி: A. **சூசைமேரி**
**மகன்கள், மகள்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**
வடலூர்.

## நினைவு அஞ்சலி



**திரு. A. மரிய ஜெகநாதன் திருமதி. லூர்துமரி ஜெகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் | : | 10-06-1919 | தோற்றம் | : | 23-03-1926 |
| மறைவு | : | 10-09-1983 | மறைவு | : | 01-12-2014 |

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான் 11:25

அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறை பக்தியையும் நல்ல பண்புகளையும் கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்த தியாக உள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தாய், தந்தையை நினைத்து கலங்குகின் றோம். எங்கள் அருமை பெற்றோர் களுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா ஒளியையும் தந்தருள வேண்டுமென்று இரக்கம் நிறைந்த இயேசுவே உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

01-12-2017 வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு புதுவை, ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.





# நான்காம் ஆண்டு நினைவேந்தல்







**மண்ணில்**
03-07-1942

**விண்ணில்**
18-11-2013

# திரு. K. A. அந்தோணி ஜோசப்

(Ex-Serviceman, INDIAN ARMY)

"உமது மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும்" (சங்.50:12)

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான் 11:25.*

**செபம்**

இறைவனுக்கும் மனிதனுக்கும் உகந்த நல்வாழ்வு வாழ்ந்து எங்களை விட்டு பிரிந்து சென்ற எங்கள் குடும்ப விளக்கான உமது அடியார் திரு. **K.A. அந்தோணி ஜோசப்** அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பிரகாசத்தையும் தந்தருளும் சுவாமி ஆமென். - *ஒரு கர்.மங்.திரி.*

பிரிவால் துயருறும்
மனைவி: **கேத்ரீன் சிறிய புஷ்பம்**
மகன்கள்: **ஷிவாகோ களத்துப்பிரியன், பிரிட்டோ ரொசாரியோ**
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.
முத்தியால்பேட்டை.

திருப்பலி: அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 18-11-2017 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

✦ **மியான்மர்: தேசிய ஒன்றிப்பின் பாதையில் நடைபோட மியான்மர் கர்தினால் அழைப்பு:** பகைமை உணர்வைத் தூண்டும் பேச்சுக்களை கைவிட்டு, அமைதி மற்றும் இளம் தலைமுறையினரின் வருங்காலத்தை மனதில் கொண்டு, ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் மியான்மார் கர்தினால் Charles Maung Bo. இம்மாத இறுதியில் மியான்மாரில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தூதுப் பயணம் மேற்கொள்ள உள்ள வேளையில், திருத்தூதுப் பயண தயாரிப்புக்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள யங்கூன் கர்தினால் Maung Bo அவர்கள், வன்முறைகளைக் கைவிட்டு, குணப்படுத்தல், சகிப்புத்தன்மை மற்றும் தேசிய ஒன்றிப்பின் பாதையில் அனைவரும் நடைபோட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார். - வத்.வானொலி.

✦ **இலங்கை: கடற்கரை பாதுகாப்பில் இலங்கை பல மத மாணவிகளின் பங்களிப்பு:** இலங்கையின் Kulatara நகரின் திருக்குடும்ப துறவுசபையால் நடத்தப்படும் பள்ளியில் பயிலும், கத்தோலிக்க மற்றும் புத்தமத மாணவிகள் இணைந்து, கடற்கரை சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். Kalutara திருக்குடும்ப துறவு சபை பள்ளியினால் துவக்கப்பட்டுள்ள 'பசுமைப் பள்ளி' என்ற திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த மாணவிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மட்டுமல்ல, கடற்கரைப் பகுதிகளின் இயற்கை வளங்களுக்கு மறுவாழ்வு வழங்குவதிலும் கவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளனர். Kalutara குடிமக்கள் மன்றத்துடன் நடத்திய கலந்துரையாடலுக்குப்பின், அப்பகுதியிலுள்ள Kalido கடற்கரையை சுத்தப்படுத்தும் பணியை முதலில் துவக்கியதாகக் கூறினார், இப்பணிகளுக்கு தலைமையேற்று நடத்திவரும் அருள் சகோதரி Charitha Thandalage. - AsiaNews

✦ **ஈரான், ஈராக் நாடுகளில் நிலநடுக்கம்:** ஈரான், ஈராக் நாடுகளில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 400 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆறு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நூற்றுக்கணக்கானோர் இடுபாடுகளில் சிக்கியுள்ளனர். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பலர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஈராக்கின் ஹலப்ஜா நகரிலிருந்து 31 கி.மீ தூரத்தில் பூமிக்கடியில் 23.2 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.3 ஆக பதிவானது. இதே போல் ஈரான், மத்திய தரைக்கடல் பகுதியிலும் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தை அடுத்து 100 முறை அடுத்தடுத்து நில அதிர்வுகள் ஏற்பட்டன. மக்கள் பீதியுடன் வெட்ட வெளியில் தங்கினர். கட்டிடங்கள் சரிந்து விழுந்தன. மின்சாரம், தொலைபேசி துண்டிக்கப்பட்டது. - தினமணி, 14.11.17.

✦ **சென்னை:** பல்கலைக் கழகங்கள் 'பல்கலைக் கழகம்' என்ற பெயரை இனி பயன்படுத்தக்கூடாது, உடனடியாக நீக்கிவிட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) உத்தரவிட்டுள்ளது. சென்னை-உச்சநீதிமன்றத்தில் அண்மை யில் நடைபெற்ற வழக்கு ஒன்றை விசாரித்த நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக யுஜிசி-23 இன்படி, இவ்வாறு உத்தர விட்டுள்ளது. "பல்கலைக் கழகம்" என்ற பெயருக்குப் பதிலாக, எந்தவிதமான வார்த்தையைப் படுத்தலாம் என்பது குறித்த பரிந்துரையை யுஜிசி-க்கு இந்த நிறுவனங்கள் பதிவு செய்யலாம் என்று பதினைந்து நாள் அவகாசம் அளித்துள்ளது. நாடு முழுவதும் 123 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உள்ளன. இதில் 28 தமிழகத்தில் உள்ளன.- தினமணி.



## இரக்கத்தைப் பெறுவோம்! இயற்கையைப் பேணி வளர்ப்போம்!!

5-11-17 இதழ் தொடர்ச்சி... - வெட்டிவயல் வளவன்.

பாலாறு, பாழாறாய், கோளாறாய்ப் போச்சு. நீர் நிலை விஷமாகிவிட்டன. கடல்மீன்களைத் தவிர, நாட்டுநீர்நிலைகளில்வாழ்ந்த நாம்பிடித்து உண்ட நாட்டு வள மீன்கள் ஆறா, கெழுத்தி, குரவை, உழுவை, கெண்டை வகைகள், அயிரை மணலை, பாய்ச்சல் வலை கெண்டைகளை, காண்பது **வால் நட்சத்திரத்தைப் பார்ப்பது** போல் உள்ளன. நீர் ஆய்வு செய்து வேளாண்மையில் புரட்சி செய்வதும், குறைந்த நீர் கொண்டு பயிர் செய்வதும், 2025-ல் இன்றைய தேவையைவிட வேளாண் மைக்கு 2 மடங்கும், 7 மடங்கு தொழிற் சாலைக்கு நீர் தேவைப் படும். சிந்திப்போம். கோயில் தழுவிய குடிகள். குடிகள் தழுவிய கோயில், கோயில் தோறும் குளம். **அப்பரடிகள் சிந்தனை**. சிந்திப் போம்! 2 அடி ஆழத்தில் 3 அடிச்சுற்றில் 2 உறைகள் இறக்கி, மழை பெய்த நீரை சேமிப்பதுவா, மழைநீர் சேகரிப்பு? தமிழ்நாட்டில் **89 அணைகள் 39202 பெரியகண்மாய்,** ஏரிகள், இவை தவிர, கிணறு தொட்டு பல்ஆயிரக்கணக்கான குளம், குட்டை ஏந்தல், தம்மம் உள்ளன - இவை இருந்தும் நீர்பஞ்சம் ஏன்? சுரண்டினோம்- ஆக்கிரமித்தோம்- அதனைச் சுற்றி மண்ணை வரண்டி கரை போடவும் -காக்கவும், நீர் வரத்தை உண்டாக்கவும் மறந் தோம். இன்று நீர்க்காக இரக்கும் நிலை. 1946-47-ம் ஆண்டின் நீர்வள ஆதார சுருதிகளை 2017ம் ஆண்டுடன் ஒப்பிட்டால், **காவுபோன ரியல் எஸ்டேட், ஆக்கிரமிப்பு -சுரண்டல் வலியோர்** சிலர் இன்று கோடி - பலர் ஆனவரலாறு வெளிவரும். **தண்ணீரை நுகர்வுப் பொருள் ஆக்கிவிட்டோமே!** இசுரேல் நாட்டு தொழில் நுட்பம் "**ஹீட்மேட் மல்சிங்**" நிலப் போர்வை பயன்படுத்தினால் 80% தண்ணீர் மிச்சமாகும். (எடு: திண்டுக்கல் பகுதி) ஹைடி ரோகார்பன், மீத்தேன், பாறைவடிவ எரிவாயுவு (ஷேல்காஸ்) போன்ற வைகளில் நிலத்தடி நீர் வற்றும். கெடும். விழிப்பது நம் கடமை, - அழிப்பதும்-சுருட்டுவதும் அரசும், அதன் தரகர் செயலும் மட்டுமே இன்றைய நிலைமை **நம்முன் னோர்கள் அளித்த நீர்வள ஆதாரங்களை அதன் அடையாளங்களையாவது சந்ததியினர்க்கு விட்டுச்செல்வோம்.** கடலில் வீணாகும் நீரை தேக்கி ஆறுகளில் தடுப்பணைகள் கட்டுவோம். 1946-ல் துவங்கிய சர்தார் சரோவர் அணை (குஜராத்) 15 மாவட்டங்கள் (ராசஸ்தான்) 2 மாவட்டங்கள் நீர்பெற 2017 செப்டம்பரில் திறக்கப்பட்டது போல, நாடு முழுதும் அணைகள் கட்டி நீர் தேக்குவோம். "**லாக்கிங் சிஸ்டம்**" என்ற தொழில்நுட்பம் மூலம், இந்தியாவின் எப்பகுதிக்கும் நீரைக்கொண்டு செல்லும் திட்டத்தை அரசு செய்தால், நிலத்தடி நீர் உயரும். குடிநீர் பஞ்சம் தீரும். புவிவெப்பமயம் குறையும். மின்சாரம் கிடைக்கும். கலாமின் கனவு நனவாகும் - கட்டுண்டோம் - பொறுத்திருப்போம்.

### பொங்கிவா:

*"ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே!*
*ஜீவநதியே என்னில் பொங்கிப் பொங்கிவா!"*

"கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே" ஜீவத்தண்ணீராம் எந்தன் நல்ல யேசுவே! ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே", "ஒளியை நோக்கா மலரில்லை - நீரை நோக்கா வேரில்லை" உன் புகழ் நோக்கா வாழ்வு எமக்குப் பயன் இல்லை. அருள் மழை பொழியும் கிறித்துவின் **திருவிலாத் திருநீரே!** எம்மை பாவத்தில் இருந்தும் - நோய் - கண்ணீர் கவலைகளில் இருந்து கழுவியருளும். "ஆழத்தில் ஜலங்களை (நீரை) பொக்கிஷமாய் வைத்தீர்" (திரு.பா.33:7). "ஞானக் கன்மலையில் தண்ணீர் குடித்தார்கள் (1கொரி.10:4) வார்த்தைகளை நினைப்போம். "**தாகமாயிருக் கிறேன்**" சிலுவையில் இயேசு சொன்னது. இச்சொற்கள் தான் அன்னை தெரசாள் மடலாய்ப் பீடங்களை அழகு செய்கிறது. ஆண்டவர் இயேசு கொடுக்கும் **ஜீவத்தண்ணீர்** நித்தியத்துக் கும் ஊறுகிற ஊற்று. அவர் சிலுவையில் கூறிய அச்சொற்கள் தாழ்விலா உலகு காக்கச் சொன்னார் - கோடிக்கணக்கில் தாகமுண்டு - அத்துணையும் தம் மானுடத் தின், புத்துலகு மகிமைக்காகவே இறைவன் கேட்டார் - உணர்வோமா?

"ஆண்டவரே! ஈசோப்புல்லினால் என்மேல் தெளிப்பீர்
நானும் தூய்மை ஆவேன்! நீரே என்னைக் கழுவும்."

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore.